1986 மே 7] [டாக்டர் கா. காளிமுத்து]

நாம் நிறைவேற்றவேண்டுமென்ற வகையில் திட்டமிட்டு வருகிறோம். ஆனால் அந்தச் செலவை நகராட்சி ஏற்கவேண்டிய சூழ்நிலை இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே அந்த வகையில் உரிய பரிசீலனையை மேற்கொண்டு அந்த நகராட்சிக்கு அந்த மேம்பாட்டுத் திட்டத்தை எப்படிக் கொண்டுவர முடியுமோ அந்த வகையில் கொண்டுவர அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் நகராட்சி மேம்பாட்டுத் திட்டத்திற்காக 7-5-1983-ல் ரூ. 7.41 இலட்சத்திற்கு அரசாங்கம் அங்கீகாரம் அளித்திருக்கிறது. ஆனால் இதுவரையில் அது நடைமுறைப் படுத்தப்படவில்லை. அதற்கான நிதியை எல்.ஐ.சி.-யிடம் கேட்டு அது கிடைக்கப்பெறாமல் மீண்டும் அரசாங்கத்தினிடமிருந்து அரசாங்கத்தினுடைய கொடையாகவோ அல்லது கடனாகவோ கேட்டு வந்த அக்கோப்புகள் பல காலமாக நிதித் துறைக்கும் உள்ளாட்சித் துறைக்கும் வந்துபோய்க் கொண்டிருக்கிறது. ஆகவே இந்த நிலைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து ஏற்கனவே 1983-ல் அங்கீகரிக்கப்பட்ட அந்தத் திட்டத்தை முடிப்பதற்குரிய வழியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவார்களா? நிதித் துறை இது குடிநீர் பிரச்னை என்பதால் அதிக அக்கறை செலுத்தி இதில் ஓரளவிற்குத் தாராளமாக இருக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொள் வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, நிலைமைகளைக் கருத்தில் கொண்டு அரசு ஆய்ந்து முடிவு செய்யும்.

4. அரசினர் சட்ட முன்வடிவு.

வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1986-ம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன்வடிவு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிமுகப்படுத்தப்படுகிற நிலையில் என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் இருக்க முடியும். அறிமுகப்படுத்துகிற நிலையில் என்ன சொல்லப்போகிறீர்கள்? அவர்கள் படிக்கட்டும் . . . . . . (குறுக்கீடு) என்னிடம் முன் அனுமதி பெற்றால்தான் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப முடியும். . . . .

திரு. ப. பொன்னுரங்கம்: பாயின்ட் ஆப் ஆர்டருக்கு பெர்மிஷனா . . .

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: பாயின்ட் ஆப் ஆர்டருக்கு பெர்மிஷன் வாங்கவேண்டுமா என்று கேட்கிறார்கள். தங்களுடைய பெர்மிஷன் வாங்காமல் எப்படி பாயின்ட் ஆப் ஆர்டர் கிளப்பலாம் என்று புரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பில்லையொட்டி என்ன பாயின்ட் ஆப் ஆர்டர்?

திரு. ப. பொன்னுரங்கம்: இது ஆர்டராக இல்லை, அதனால் தான் நான் சொல்கிறேன். கடந்த ஆண்டு கூட மத்தியில் இருந்து வந்த ஒரு மாடல் பில்லை இன்கார்ப்பரேட் செய்வதற்கு காலம் கடத்தி நீட்டித்து வருகிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லி பில் டிஸ்கஷனுக்கு வந்து . . .

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: இதெல்லாம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் நேரத்தில் பேசவேண்டியது, இப்போது பேசினால்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிமுகம் செய்து ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்போது பேசுங்கள். தயவுசெய்து ஒரு முறையைப் பின்பற்றுங்கள். (குறுக்கீடுகள்) ஒவ்வொன்றுக்கும் விவாதம் செய்துகொண்டிருந்தால் எப்படி?

திரு. ப. பொன்னுரங்கம்: காப்பி ஏன் தரக்கூடாது? (குறுக்கீடுகள்)

1986 மே 7]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

Thiru P. PONNURANGAM: Mr. Speaker Sir, I oppose the introduction of this Bill.

Thiru V. P. CHINTHAN: Mr. Speaker Sir, I oppose the introduction of this Bill.

Mr. SPEAKER: Your objections are recorded. (குறுக்கீடு) இந்த பில்லை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்போது பார்த்துக் கொள்ளலாம். இன்று காவல் துறை மானியத்தின் மீதி நடந்த விவாதத்திற்கு பதில் சொல்ல வேண்டும். பின்னர் லேபர் மானியம் வருகிறது. நல்ல நேரத்தை விடுகிறீர்கள். தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பொன்னுரங்கம் சொல்வதை நன்றாக ரிக்கார்ட் செய்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: இச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறி முகம் செய்யப் பெற்றிருக்கிறது.